## தென்னையை தோட்டக்கலைப் பயிர் பட்டியலுக்கு மாற்ற வலியுறுத்தல்

First Published : 03 Sep 2010 09:36:29 AM IST

கோவை, செப்.2: தென்னையை எண்ணெய் வித்து பட்டியலில் இருந்து தோட்டக்கலைப் பயிர் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து இந்த அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி புதன்கிழமை விடுத்த அறிக்கை:

கோவையில் செப்.15-ம் தேதி அசுவமேத யாகம் நடத்த அனுமதி கோரி மாநகரக் காவல் ஆணையரிடம் 2 வாரங்களுக்கு முன்பு மனு கொடுக்கப்பட்டது. ஆனால், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இந்த யாகத்தில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பங்கேற்கலாம்.

கோவையை அடுத்து அனைத்து மாவட்ட தலைநகரங்களில் இந்த யாகம் நடத்தப்படும். கள்ளுக்கு அனுமதி வழங்காததை கண்டித்தும், பாலுக்கு உரிய விலை கொடுக்காததை கண்டித்தும் திருச்சிக்கு செப்.8-ம் தேதி முதல்வர் கருணாநிதி வரும்போது கருப்புக்கொடி காட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட காலத்தில் நடந்த தனிநபர் சத்தியாகிரக அறப்போராட்டம் போல இப்போராட்டம் நடத்தப்படும். தென்னைக்கு இலவச மின்சாரத்தில் தண்ணீர் பாய்ச்சினால் மின்துறை அபராதம் விதிக்கிறது.

எண்ணெய் வித்துக்கள் பட்டியலில் தென்னை இடம்பெற்றுள்ளதால், அதற்கு இலவச மின்சாரம் பெற முடியவில்லை. எனவே, தென்னையை தோட்டக்கலைப் பயிர் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என தென்னிந்திய தென்னை சாகுபடியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இதற்கு தமிழக அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## அனைத்து மாவட்டங்களுக்கும் தென்னை காப்பீட்டு திட்டம் விரிவுபடுத்தப்படுமா?

எஸ். கல்யாணசுந்தரம்

First Published : 03 Sep 2010 03:32:37 AM IST



திருவாரூர்: தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் தென்னை மர காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தி, அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னை விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

பெற்ற பிள்ளை காப்பாற்றாவிட்டாலும், நாம் வைத்த தென்னங்கன்று (தென்னம்பிள்ளை) நம்மை காப்பாற்றும் என்பார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த தென்னை சாகுபடியை ஏராளமான விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

காவிரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் போதிய நீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ள நெல் சாகுபடியை ஈடுகட்டும் வகையில், தற்போது விவசாய நிலங்களில்கூட தென்னை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

தமிழகத்தில் பொள்ளாச்சி, தேனி, கோவை, தஞ்சாவூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் தென்னை மர காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. ஆனால், தென்னை சாகுபடி அதிகரித்து வரும் பிற மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஒவ்வொரு மரத்துக்கும் காப்பீடு மற்றும் இழப்பீட்டை அமலாக்க வேண்டும்.

15 வயது வரை உள்ள மரங்களுக்கு ரூ.1,500-ம், அதற்கு மேல் வயதுள்ள மரங்களுக்கு ரூ.2,000 என இழப்பீட்டை உயர்த்த வேண்டும். இழப்பீட்டில் விவசாயிகளின் பங்காக 20 சதம் பிடித்தம் செய்வதை ரத்து செய்து, முழுத் தொகையையும் வழங்க வேண்டும் என்கின்றனர் தென்னை விவசாயிகள்.

இதுகுறித்து தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலர் பி.எஸ். மாசிலாமணி கூறியது:

தற்போது தென்னை சாகுபடியில் அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, தென்னை சார்ந்த துணைப் பொருள்கள் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் வகையில் உரிய தொழில்நுட்பம், மானியத்துடன் கடனுதவி, சந்தை வாய்ப்பு ஆகியவற்றை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். மானியமும் அளிக்கவேண்டும்.

மேலும், தமிழக அரசே உரி தேங்காய்களாக நுகர்பொருள் வாணிபக் கழகம், வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், டான்பெட் ஆகியவற்றின் மூலம் கிலோ ரூ.17-க்கு கொள்முதல் செய்ய வேண்டும். அதுவரை கொப்பரைத் தேங்காயை கிலோ ரூ.55-க்கு கொள்முதல் செய்ய வேண்டும்.

தென்னை விவசாயிகள் நேரடியாகச் சென்று விற்பனை செய்யும் வகையில், கொப்பரைக் கொள்முதலில் உள்ள கடும் நிபந்தனைகளைத் தளர்த்தி, எளிய முறையில் கொள்முதல் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், புதிய விவசாயிகள், இதில் ஈடுபடும் வகையிலும் தென்னை சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.10,000 கடனுதவியை 4 சத வட்டியில் வழங்க வேண்டும். தென்னையைத் தாக்கி, அதன் காய்ப்புத் திறனுக்கு ஊறு விளைவிக்கும் வண்டுகள் தாக்குதலிலிருந்தும், ரியோபைட் எனப்படும் நோயிலிருந்தும் தென்னை மரங்களைக் காக்க உரிய தொழில்நுட்ப உதவியோடு, உரிய மருந்துகளும் எளிய முறையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்ற வேண்டும் என்கின்றனர் தென்னை விவசாயிகள்.

சென்னையில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியக் கிளையை தென்னை அதிகம் விளையும் மாவட்டங்கள் அல்லது தமிழகத்தின் மையப் பகுதியில் அமைக்க வேண்டும். தென்னை வளர்ச்சி வாரியத்தின் திட்டங்களை தென்னை விளையும் அனைத்துப் பகுதிகளுக்கும் அமல்படுத்த வேண்டும் என்பதே தென்னை விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

### மானிய விலையில் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தலாம்

First Published : 02 Sep 2010 01:21:03 PM IST

ராமநாதபுரம், செப். 1: மானிய விலையில் விதைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தி நல்ல மகசூல் பெறுமாறும் ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி புதன்கிழமை கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ராமநாதபுரம் மாவட்டத்தில் 13 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 90 சதவிகித பரப்பு மானாவாரியாகவே சாகுபடி செய்யப்படுகிறது. வடகிழக்குப் பருவமழையின் போது கிடைக்கப் பெறும் மழையால் கண்மாய்கள் நிரம்பி அதன் ஆயக்கட்டுப் பகுதிகளில் பகுதி மானாவாரியாகவும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

தற்சமயம் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடங்க ஆயத்தமாக முக்கிய இடுபொருளான விதைகளை வாங்கி இருப்பு வைக்கும் பணியைச் செய்து வருகின்றனர். வேளாண் துறையில் பல்வேறு திட்டங்கள் மூலம் மானிய விலையில் நெல் விதைகள் விநியோகிக்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி சான்று பெற்ற விதைகளான ஆடுதுறை 45, ஆடுதுறை 43, ஐஆர். 36, ஆடுதுறை 39, பிபிடி ஆகிய ரகங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் கடைகளின் மூலம் விநியோகிக்கப்படும் விதைகளுக்கும் கிலோவிற்கு 5 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களிலும் சான்று பெற்ற நெல் விதைகளும் உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சான்று பெற்ற நெல் விதைகளுக்கும் கிலோவுக்கு 5 மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இந்த தருணத்தைப் பயன்படுத்தி சான்று பெற்ற விதைகளைப் பெற்று நல்ல மகசூல் அடையலாம்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம் விநியோகம்**

First Published : 02 Sep 2010 01:20:48 PM IST

பெரம்பலூர், செப். 1: பெரம்பலூர் வட்டார வேளாண்மைத் துறை சார்பில், 50 சத மானியத்தில் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஜிப்சம் விநியோகம் செய்யப்படுகிறது என்றார் வேளாண்மை உதவி இயக்குநர் எம். செந்தமிழ்ச்செல்வன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் வட்டாரத்தில் தற்போது பெய்த மழையால் 300 ஹெக்டேர் பரப்பளவில் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஜிப்சம் இடுவது அவசியமாகும்.

பெரம்பலூர், அம்மாபாளையம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து, 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு ஜிப்சம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஜிப்சம் என்பது இயற்கை உரமாகும். இதில் 22.2 சதம் கால்சியம், 21.1 சதம் கந்தகச் சத்து உள்ளது.

ஜிப்சம் இடுவதால், மண் பொலப்பலப்பாகி மண்ணில் விழுதுகள் நன்கு இறங்கி, நிறைய காய்கள் பிடிக்கும். திரட்சியான காய்கள் உற்பத்தியாக ஜிப்சம் உதவுகிறது. காய்கள் நன்கு முற்றவும், பொக்கில்லா கடலைகள் பெற, கால்சியச் சத்து உதவுகிறது. மேலும், நிலக்கடலையில் எண்ணெய் அளவையும், புரதச் சத்தின் அளவையும் அதிகரிக்க கந்தகச் சத்து உதவுகிறது.

ஒரு ஹெக்டேருக்கு (2.5 ஏக்கர்) 400 கிலோ என்ற அளவில் கடலைக்கு இட வேண்டும். அடியுரமாக 200 கிலோ இட வேண்டும். மேலுரமாக பூத்து விழுதுகள் இறங்கும் தருணத்தில் அதாவது, விதைத்த 40 அல்லது 45-வது நாளில் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும்.

ஜிப்சம் இடுவதால் கடலையில் 25 சதம் அதிக மகசூல் கிடைக்கும். எனவே, மானாவாரி கடலைப் பயிரில் அதிக மகசூல் பெற, பெரம்பலூர், அம்மாபாளையம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் 50 சத மானிய விலையில் பெற்று விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்த வேண்டுமா?**

First Published : 02 Sep 2010 11:10:56 AM IST

ஒசூர், செப்.1: கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர் மாவட்டங்களில் தற்பொழுது தென்னையில் கருந்தலை புழுத் தாக்குதல் அதிகம் உள்ளதால் அதை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து வேளாண் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

ஒசூர் கோட்டத்தில் ஒல்லன்வாடி கிராமத்தில் உள்ள தென்னை மரங்களை ஆய்வு செய்த வேளாண்மை இணை இயக்குநர் ராஜன், வேளாண் விஞ்ஞானிகள் டாக்டர் சுந்தரராஜன், ரமேஷ்பாபு, வேளாண் உதவி இயக்குநர் நாகராஜன் ஆகியோர் கூறியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடிசானப்பள்ளி, கொல்லப்பள்ளி, தொரப்பள்ளி, ஒன்னல்வாடி, காரப்பள்ளி, வேப்பன்ப்பள்ளி, ஊத்தங்கரை, வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் தென்னை மரங்களில் கருந்தலைப் பழுக்களின் தாக்குதல் தென்படுகிறது.

தாக்குதலின் அறிகுறிகள்:

புழுத் தாக்கப்பட்ட தென்னை மட்டைகளின் அடிபாகத்தில் அறிக்கப்பட்டு சக்கைகளிலான நீளமான கூண்டுகள் காணப்படும். இதில் புழுக்கள் தென்படும். இவை மட்டைகளில் உள்ள பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். இதனால் மட்டைகள் காய்ந்து விடும்.

தடுக்கும் முறையில்:

கருந்தலை புழுவினால் பாதிக்கப்பட்ட ஒலைகள் மற்றும் மட்டைகளை தனியாக எடுத்து எரித்துவிட வேண்டும்.

இளம் மரங்களில், மைகுளோராபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. வீதம் கலந்து தாக்குதல் அதிகம் உள்ள மரங்களின் அடிபாகத்தில் தெளிக்க வேண்டும்.

காய்ப்பு வந்த மரங்களில், மரத்தின் அடிபாகத்தில் இருந்து 1.5 மீட்டர் உயரத்தில் மரத்தில் சாய்வாக துளையிட்டு அதனுள் மோனாகுரோடம்பாஸ் மருந்தை 5 மி.லி. ஊற்றி தாமிர கரைசல் கலந்த களி மண்ணால் மூடிவிட வேண்டும்.

வேர்மூலம் கட்டுப்படுத்தவதாக இருந்தால், வளர்ந்த வேரை சாய்வாக வெட்டி அதில் மோனோகுரோடபாஸ் கலவையை பாலிதீன் பை மூலம் கட்டி விட
வேண்டும்.

**துவரை சாகுபடிக்கான செயல்விளக்கத் திடல்**

First Published : 02 Sep 2010 02:34:45 PM IST

ஓட்டப்பிடாரம், செப். 1: ஓட்டப்பிடாரம் வட்டாரப் பகுதியில் துவரை சாகுபடியை அதிகரித்திட தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயல்விளக்கத் திடல் அமைக்கப்பட உள்ளது.

இதுபற்றி ஓட்டப்பிடாரம் வேளாண் உதவி இயக்குநர் அ.மோகன்ராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

|20 ஆயிரம் மானியத்தில் அமையும் இத்திடலானது 4 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இதுபோன்று ஒரு ஏக்கர் பரப்பளவில் அமையும் ஒவ்வொரு திடலுக்கும் மானியமாக |5 ஆயிரம் வழங்கப்படும். இதில் துவரை பயிரிடப்படும் திடலுக்கு 20 கிலோ விதை உள்ளிட்ட உரங்கள், களைக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இப் பயிரைப் பயிரிடும் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால், செயல்விளக்கத் திடல்கள் அனைத்தும் விதைப் பண்ணையால் பதிவு செய்யப்பட்டு, விளையும் விதைகள் துறை வாயிலாக கொள்முதல் செய்யப்படும்.

துவரை பயிரிடல் குறித்த சந்தேகங்களை அப்பகுதி உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் ஓட்டப்பிடாரம் உதவி வேளாண் அலுவலகத்தை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

**வேளாண் பல்கலை. பேராசிரியருக்கு விருது**

First Published : 02 Sep 2010 10:28:40 AM IST

கோவை, செப். 1: தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் "தமிழ்நாடு விஞ்ஞானி விருது' வேளாண் பல்கலைக்கழக நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைத் தலைவர் கே.எஸ். சுப்பிரமணியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அறிவியல், தொழில்நுட்ப கழகத்தின் வெள்ளி விழாவில், தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி இவ் விருதை வழங்கினார்.

வேர் உட்பூசணம் மூலம் மண்வளம் பெருகுவது குறித்த ஆய்வுக்காக பேராசிரியர் சுப்பிரமணியனுக்கு இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் தனது ஆராய்ச்சியின் மூலமாக, பயிர்களில் ஊட்டப் பற்றாக்குறைகளைக் கண்டறியும் கணினி மென்பொருளை

உருவாக்கியுள்ளார். இந்த மென்பொருளைப் பயன்படுத்தி 65 வகையான வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் ஊட்டச்சத்து பற்றாக்குறையைக் கண்டறியலாம்.

தினமலர்

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் இலக்கை தாண்டி செம்மை நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,02:26 IST

காஞ்சிபுரம்:"காஞ்சிபுரம் மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விடக் கூடுதலாக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது' என, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கையின் விவரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் சொர்ணவாரி பருவத்தில் 20 ஆயிரம் எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டது.

தற்போது, 18 ஆயிரத்து 490 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.சம்பா பருவத்தில் 85 ஆயிரத்து 400 எக்டேர், நவரை பருவத்தில் 44 ஆயிரம் எக்டேர் பயிர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் செம்மை நெல் சாகுபடியில் 6,200 எக்டேர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு 11 ஆயிரத்து 514 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் சிறுதானியத்தில் 4,000 எக்டேர் இலக்கு பரப்பிற்கு 500 எக்டேர், பயறு வகையில் 13 ஆயிரத்து 371 எக்டேர் இலக்கு பரப்பிற்கு 1,600 எக்டேர், எண்ணெய்வித்தில் 47 ஆயிரம் எக்டேர் இலக்கு பரப்பிற்கு 3,000 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.வேளாண்மைத் துறை மூலம் நடப்பாண்டில் சொர்ணவாரி மற்றும் முன் சம்பா பருவத்தில் 307 டன் நெல் விதைகள், 90 கிலோ சிறுதானிய விதைகள், 8.237 டன் பயறு விதைகள், 33.164 டன் எண்ணெய்வித்து விதைகள் வினியோகிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் 487.822 டன் நெல் விதை, 382 கிலோ சிறுதானிய விதைகள், 11.803 டன் பயறு விதைகள், 14.155 டன் எண்ணெய்வித்து விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.நடப்பாண்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 45 ஆயிரம் விவசாயிகள், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதம் மானியமாக வழங்க, 90 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டி நெல், நிலக்கடலை, உளுந்து பயிர்களில் நடத்தப்பட உள்ளது. அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளை கவுரவப்படுத் தும் வகையில் அண்ணா பதக்கம் மற்றும் பரிசுத் தொகை வழங்கப்படும். இவ்வாறு விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

**நீரில் மூழ்கிய நெற்பயிர்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2010,01:59 IST

திருப்போரூர்:தொடர் மழையால் மானாமதியில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.கடந்த வாரம் மாநிலம் முழுவதும் மழை பெய்தது. திருப்போரூர் அடுத்த மானாமதி, அருங்குன்றம் கிராமங்களில் சொர்னாவரி பட்டத்தில் நெற்பயிர்கள் சாகுபடி செய்திருந்தனர். அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள், ஆட்கள் கிடைக்காததால் அறுவடை செய்யப்படாமலிருந்தது.

கடந்த வாரம் பெய்த மழையில், விவசாய நிலங்கள் நீரில் மூழ்கின. சில பகுதிகளில் தண்ணீரை வெளியேற்றியபோதிலும் தாழ்வான இடங்களிலிருந்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு முளைக்க துவங்கி விட்டன.விவசாய அதிகாரிகளிடம் கேட்டபோது, "பாதிப்பு குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்துள்ளோம்' என்றனர்.

**நெல் சாகுபடி,விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2010,02:12 IST

திருத்தணி:வேளாண்மை,தோட்டக்கலை குறித்து உழவர் மன்ற அமைப்பாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.திருத்தணி கோட்டத்தில் உள்ள உழவர் மன்ற அமைப்பாளர் மற்றும் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம், திருத்தணி வேளாண்மை அலுவலகத்தில் நடந்தது. முகாமிற்கு காஞ்சிபுரம் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் சீதாராமன் தலைமை வகித்து செம்மை நெல் சாகுபடி மற்றும் பயறு வகைகளுக்கு டிஏபி கரைசல் தெளித்தல் குறித்து விளக்கினார்.

திருத்தணி வேளாண்மை உதவி இயக்குனர் முகமது ரபிக் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம், காப்பீட்டு திட்டம் மற்றும் எண்ணெய்வித்து திட்டங்கள் பற்றி விளக்கி, மானிய விவரங்களை தெரிவித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர்

நவநீதகண்ணன் மா, கொய்யா சாகுபடி குறிப்புகள், துல்லிய நீர்பாசன திட்டம், மூலிகை பயிர்கள் சாகுபடி குறித்து விளக்கி அதற்கு அரசு வழங்கும் மானிய பயிர்கள் பற்றியும் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் களர் உவர் சீர்திருத்த திட்ட வேளாண்மை அலுவலர் நரசிம்ம ரெட்டி திட்டம் பற்றி விளக்கி, செயல்விளக்கம் செய்து காட்டினார். இந்த திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் திருவாலங்காடு பகுதி தேர்வு செய்யப் பட்டுள்ளது. மேலும் அதற்கான விவசாயிகள் மண் பரிசோதனை செய்து களர், உவர் பாதிப்பு உள்ளவர்கள் மானியம் பெற்று சீர்திருத்தம் செய்ய வேண்டும்' என்றார்.

**எண்ணெய் பனை சாகுபடி செய்ய ரூ. 11.35 லட்சம் மானியம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,01:37 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூர் வட்டாரத்தில் எண்ணெய் பனை சாகுபடிக்கு 11.35 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

திருநாவலூர் வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: திருநாவலூர் வட்டாரத்தில் எண்ணெய் பனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இரண் டரை ஏக்கருக்கு 143 கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் பராமரிப்பு செலவிற்காக முதல் ஆண்டிற்கு 4,140 ரூபாயும், இரண்டாம் ஆண்டில் 2,450 ரூபாயும், மூன்றாமாண்டில் 3,250 ரூபாயும் வழங் கப்படுகிறது. கன்றுகளை பராமரிக்க 50 சதம் மானிய விலையில் ரசாயன உரம் மற்றும் நுண்ணுயிர் வழங்கப்படுகிறது. மேலும் திருநாவலூர் வட்டாரத்தில் 2010-11 ஆண்டிற்கு எண்ணெய் அபிவிருத்தி திட்டத்தின் படி கன்றுகள் நடவு மானியமாக 3.75 லட்ச ரூபாயும், பராமரிப்பு மானியமாக முதலாண்டு 3.50 லட்சம், இரண்டாம் ஆண்டு 60 ஆயிரம், மூன்றாம் ஆண்டு 1.26 லட்சம், நான்காம் ஆண்டு 1.62 லட்சம் ரூபாயும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மானியமாக 57 ஆயிரம் உட்பட 11.35 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இந்த திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

**தென்னையை தாக்கும் நோய்கள் கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,02:24 IST

ஓசூர்: தென்னையை தாக்கும் நோய்களை கட்டுப்படுத்த ஓசூர் வேளாண்மைதுறை உதவி இயக்குனர் நாகராஜ் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: ஓசூர் தாலுகாவில் காரப்பள்ளி, கொல்லப்பள்ளி, தொரப்பள்ளி, குடிசாகனப்பள்ளி, ஒன்னல்வாடி சுற்றுவட்டார கிராமங்களில் தென்னை மரங்களில் கருத்தலை புழு தாக்குதல் தென்படுகிறது. தென்னை மரத்தை தாக்கி சேதப்படுத்தும் பூச்சிகளில் கருத்ததல புழு முக்கியத்தை வகிக்கிறது.

இப்புழு தாக்குதல் ஜனவரி முதல் மே மாதம் வரை காணப்படுகிறது. நோய் தாக்கப்பட்ட தென்னையில் புழுக்கள் இலை திசுக்களில் உள்ள பச்சையத்தினை சுரண்டி சாப்பிடுகிறது. பெண் பூச்சிகள் மங்கலான வெண்ணிறம் கொண்ட முட்டைகளை இலைகளின் அடிப்பாகத்தில் அல்லது பழைய புழுக்கூடுகளின் அருகே முட்டையிடும். இந்த முட்டைகளில் இருந்து ஐந்து நாட்களில் வெளியேறும் பூச்சிகள் பச்சை கலந்த பழுப்பு நிற உடல்களை கொண்டிருக்கும். தலை கருப்பாகவும், உடல் மீது பழுப்பு நிற கோடுகளும் இருக்கும்.

கருத்தலை புழு மேலும் மற்ற தென்னைகளுக்கு பராமல் தடுக்க தாக்கப்பட்ட மட்டை, ஓலைகளை எரித்து விட வேண்டும். ஒட்டுண்ணிகளான, "பேராசியரோலா', "நேப்பான்டிஸ்' அல்லது, "பிரகான்பிரேவிகார்னிஸ்' ஆகியவற்றை மரத்தின் அடிபாகத்தில் வைதத்தால் தாக்குதலின் அறிகுறிகள் குறையும் வரை ஜனவரி மாதம் தென்னையில் புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம். வளரும் மரங்களில் கருத்தலை புழுக்களை கட்டுப்படுத்த "டைகுளோராவாஸ்' 2 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தாக்குதல் அதிகம் உள்ள மரங்களில் இலைகளின் அடிப்பாகத்தில் நனையும்படி தெளிக்க வேண்டும்.

காய்ப்புக்கு வந்த மரங்களில் தாக்குதலை கட்டுப்படுத்த மரத்தின் அடிபாகத்தில் இருந்து 15 மீட்டர் உயரத்தில் மரத்தின் தண்டுபாகத்தில் சாய்வாக துளையிட்டு அதனுள் "மோனாகுரோடபாஸ்' மருந்தினை ஊற்றிய பின் தாமிர கரைசல் கலந்த களி மண்ணாமல் மூடி விட வேண்டும்.

வேர் மூலம் கட்டுப்படுத்துவதாக இருந்தால் நன்கு வளர்ந்த வேரினை சாய்வாக வெட்டிய பின் பாலிதீன் பையில் "மோனோகுரோடபாஸ்' தண்ணீரில் கலந்து கலவையில் வேரினை இட்டு இறுக்கமாக கட்டிவிட வேண்டும்.

இந்த முறையினை அதிகமான தாக்குதல் சமயங்களில் மட்டும் கடைபிடிப்பது அவசியம்.

வேர்மூலம் மருந்து செலுத்துவது மற்ற முறைகளை விட எளியது. மருந்து இட்ட 40 நாட்கள் வரை காய் பறிப்பதனை தவிர்க்க வேண்டும். இதற்கு மரம் ஒன்றுக்கு 6 ரூபாய் வரைதான் செலவாகிறது.

தென்னை விவசாயிகள் நோய் பாதிப்பு மற்றும் தடுக்கும் முறைகளை குறித்தும் வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**ரூ.74 லட்சத்தில் பசுந்தீவன திட்டம் ஓசூர் கால்நடை பண்ணையில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2010,00:06 IST

ஓசூர்: விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பசுந்தீவன பயிர் வழங்கும் திட்டம், ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் 74 லட்ச ரூபாயில் துவக்கப்பட்டுள்ளது.
தமிழக அரசு பால்உற்பத்தியை பெருக்கவும், கால்நடைகளை பராமரிக்கவும் மத்திய அரசு உதவியுடன் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஓசூர் அடுத்த மத்திகிரி கால்நடை பண்ணையில் 97 லட்சம் ரூபாய் மதிப்பில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் நடபபாண்டு 517 ஏக்கரில் பசுந்தீவனம் மற்றும் புல்கரணைகள் வளர்க்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பசுந்தீவனங்கள், விதைகளை வழங்குவதற்கு கால்நடை பராமரிப்பு துறை நடவடிக்கை எடுத்துள்ளது.
முதற்கட்டமாக கால்நடை பண்ணையில் உற்பத்தி செய்த பசுந்தீவன பயிர், புல்கரணைகள் மற்றும் விதைகளை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கும் திட்டம் துவக்க விழா நடந்தது. கலெக்டர் அருண்ராய் திட்டத்தை துவக்கி வைத்து கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பசுந்தீவன பயிர் மற்றும் புல்கரணைகள் வழங்கினார். மாவட்ட கால்நடை துறை இணை இயக்குனர் ஞானஉபகாரம் முன்னிலை வகித்தார். ராஜசேகரன் உதவி இயக்குனர் ஜெயராமன் வரவேற்றார்.

கலெக்டர் அருண்ராய் பேசியதாவது: மத்திகிரி கால்நடை பண்ணையில் நடப்பாண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதற்காக பண்ணையில் 10 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 517 ஏக்கரில் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது. விவசாயிகளும் உற்பத்தி செய்வதற்கு, மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகிறது. பசுந்தீவன பயிர்கள் விவசாயிகளுக்கு கிலோவுக்கு 1 ரூபாய்க்கும், புல்கரணைகள் ஒன்று 15 பைசாவுக்கும் வழங்கப்படுகிறது. கால்நடைகள் விரும்பி சாப்பிடும் ஆப்பிரக்கன் நெட்டை மக்காச்சோளம் 10 ஏக்கரில் பண்ணையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏக்கருக்கு 16 டன் வீதம் மக்காச்சோளம் பயிர் உற்பத்தி செய்யப்பட்டு சாதனைப்படைக்கப்பட்டுள்ளது. வேலிமசல் பயிர் 8.5 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது செழித்து வளர்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இதுவதவிர தீவன பயிர்கள் சி.ஓ-3, சி.ஓ-4 புல்கரணைகள் 40 ஏக்கரில் உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தம் 517 ஏக்கரில் பல ஆயிரம் டன் கால்நடை தீவன பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

**தென்னையில் கருந்தலை புழு தாக்குதல்: மரங்கள் சருகாகும் அவலம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2010,00:07 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை மரங்களை கருந்தலை புழு தாக்குததால், மரங்கள் அழிந்து வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. கோவை, நாமக்கல், ஈரோடுக்கு அடுத்தப்படியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று படுக்கையில் விவசாயிகள் அதிகளவு தென்னை சாகுபடி செய்துள்ளனர். குறிப்பாக ஓசூர், தொரப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டிணம் மற்றும் தேன்கனிக்கோட்டை சுற்றுவட்டார பகுதியில் அதிகளவு தென்னை மரங்கள் உள்ளன.
இங்கு உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள், சேலம், காங்கேயம், வேலூர் மற்றும் கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் விவசாயிகள் அதிகளவு ஏற்றுமதி செய்கின்றனர். கோடை காலத்தில் இளநீர் விற்பனைக்காக விவசாயிகள் தென்னை மரங்களை குறிப்பிட்ட தொகைக்கு வியாபாரிகளுக்கு குத்தகைக்கு விடுகின்றனர்.
சில ஆண்டுகளாக தேங்காய்களுக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனைர். கூட்டு சங்கங்கள் மூலம் கொப்பரை தேங்காய்கள் கொள்முதலும் எதிர்பார்த்த அளவு இல்லாததாலும் விவசாயிகள் வேதனையடைந்து வந்தனர். மாவட்டத்தில் தென்னை மரங்களில் கடந்த சில மாதமாக கருத்தலை புழு தாக்குதல் அதிகமாக உள்ளன. ஓசூர் தாலுகாவில் குடிசாகனப்பள்ளி, கொல்லப்பள்ளி, தொரப்பள்ளி, ஒன்னல்வாடி, காரப்பள்ளி ஆகிய பகுதியில் தென்னை மரங்களில் கருத்தலை புழு தாக்குதல் அதிகமாக உள்ளது. புழு தாக்குதல் உள்ள தென்னை மரங்களில் இலைகள் முழுவதும் காய்ந்து அழிந்து வருகிறது.

தேங்காய்கள் பருக்காமல் குறும்பலாக மரத்தில் இருந்து கீழே உதிர்ந்து விழுகிறது. ஒரு சில மரங்களில் காய்கள் உற்பத்தியானாலும், நோய் தாக்குதலால் பெருப்பதில்லை. இளம்நீரும் குடிப்பதற்கு ஏற்ற சுவையாக இல்லாமல், ஒருவித கசப்பு தன்மை ஏற்படுகிறது. மரங்களின் மட்டை அடிபாகத்தில் இலைகள் அரிக்கப்பபட்டு சக்கைகளிலான நீண்ட கூண்டுகள் காணப்படுகிறது. சக்கை கூடுகளுக்குள் புழுக்கள் அதிகரித்து மட்டைகளையும், இலைகளின் பச்சை தன்மையை சுரண்டி திண்கின்றன. இதனால், நோய் தாக்கப்பட்ட தென்னை மட்டைகள் சருகாகி அனைத்தும் காய்ந்து கீழே விழுகிறது.
ஓசூர் தாலுகாவில் தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் சாகுபடி செய்த தென்னை தோப்புகளை விவசாயிகள் அழித்து, மரங்களை வெட்டி விறகுக்கு விற்பனை செய்யும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் மாவட்டத்தில் தென்னை விவசாயம் அழிந்து, தேய்காய் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொரப்பள்ளியை சேர்ந்த விவசாயி சந்திரய்யா கூறியதாவது: இருபது ஆண்டுகளுக்கு மேலாக தென்னை விவசாயம் செய்து வருகிறோம். சமீபத்தில் தென்னை சருகாகி வருகிறது. வேளாண் அதிகாரிகளிடம் கேட்டால், கருந்தலை புழு தாக்குதல் என கூறி அவற்றை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கூறுகின்றனர். அவற்றை கடைபிடித்தாலும் தென்னை மரங்களில் நோய் கட்டுப்படவில்லை. விவசாயிகளுக்கு போதிய தெளிப்பான் அணுகு முறைகள் தெரியாது என்பதால், பராமரிப்பு செலவுக்கு பயந்து தென்னை மரங்களை அடியோடு வெட்டி வேறு விவசாயத்துக்கு மாறி வருகின்றனர்.
தொரப்பள்ளி பகுதியில் மட்டும் 2,000க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை வெட்டி அழிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் நேரடி ஆய்வு செய்து விவசாயிகளுக்கு நோய் தடுப்பு முறை குறித்து செயல்முறை பயிற்சி விளக்கம் அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**உச்சத்தில் பூண்டு விலை நடுத்தர மக்கள் திணறல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,01:54 IST

கோபிசெட்டிபாளையம்: தங்கத்துக்கு போட்டியாக ஒரு கிலோ பூண்டு விலை 200 ரூபாயை தாண்டி வரலாறு படைத்துள்ளது. திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் நெருங்கி வரும் நிலையில், பூண்டு விலை உயர்வு நடுத்தர மக்களை பெரிதும் பாதித்துள்ளது.

மருத்துவ குணம் மிகுந்த பூண்டு, இந்திய சமையலில் பல்வேறு வகைளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக அசைவ சமையலில் பூண்டின் பங்கு மிக முக்கியமானது. தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் பூண்டு தேவைக்கு சீனா மற்றும் வடமாநிலங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையுள்ளது. தமிழகத்தில் நீலகிரி உள்ளிட்ட மலைப்பகுதிகளில் பூண்டு ஓரளவுக்கு சாகுபடி செய்யப்படுகிறது. சீனாவில் இருந்து பல ஆண்டுகளாக பூண்டு அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் நடப்பாண்டு சீனா பூண்டு அதிகளவில் இறக்குமதி செய்யப்படவில்லை. மழை குறைவால் ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் பூண்டு சாகுபடி வெகுவாக குறைந்து விட்டது.

இறக்குமதி மற்றும் உற்பத்தி குறைவால் ஒரு கிலோ பூண்டு விலை சென்ற மாதம் 100 ரூபாயை தொட்டது. நடப்பு வாரம் ஒரு கிலோ நாட்டு பூண்டு 130 முதல் 150 ரூபாய் வரையிலும், ஹிமாச்சல பிரதேச பூண்டு ஒரு கிலோ 240 ரூபாய் வரையிலும், நீலகிரி பூண்டு 255 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. வரும் காலங்களில் ரம்ஜான், விநாயகர் சதுர்த்தி,

தீபாவளி உள்ளிட்ட விஷேச தினங்கள் தொடர்ந்து வரவுள்ளதால், பூண்டுக்கு அதிக தேவை ஏற்படும். இதனால் பூண்டு விலை மேலும் உயரும்' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தென்னை பயிரிடுதல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,02:40 IST

திருப்பூர்:திருப்பூர் மாவட்டத்தில் தென்னை பயிரிடுதல் அதிகரித்து வருகிறது; கடந்த மூன்றாண்டுகளில் 11 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு உயர்ந்துள்ளது.நம் நாட்டில் 65 சதவீத மக்கள் விவசாய தொழிலை சார்ந்து இருக்கின்றனர். இதர தொழில்களின் வளர்ச்சியால், விவசாயத் துறைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட் டுள்ளது. அதிகமான விவசாயிகள் ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, தேர்ந்தெடுப்பது தென்னை விவசாயம்.சொட்டு நீர் பாசனம், குறைவான தண்ணீர் தேவை, நிலையான வருமானம் என விவசாயிகளை தென்னை விவசாயம் ஈர்த்து வருகிறது.

ஏக்கருக்கு 70 மரங்கள் வீதம் பயிர் செய்யலாம். விவசாயி ஒருவரே, பல ஏக்கர் தென்னை மரங்களை பராமரிக் கும் வாய்ப்பு இருக்கிறது. தென்னை பயி ரிடுவதில் தமிழக அளவில் முதல் ஐந்து மாவட்டங்களில் திருப்பூரும் ஒன்றாக உள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் தென்னை பயிர் செய்தல் அதிகரித்து வருகிறது.கடந்த மூன்றாண்டுக்கு முன், 33 ஆயிரம் ஹெக்டேராக இருந்தது; தற்போது 44 ஆயிரம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் முதல் இரண்டு ஆண்டுக்கு மானியம் வழங்கப் படுகிறது. புதிய தோப்புகளை உருவாக்கவும், மகசூலை அதிகப்படுத்தவும், செயல் விளக்க திடல் அமைக்கவும் மானியம் வழங்கப்படுகிறது. கொப்பரை தேங்காய், இளநீர் பதப் படுத்துதல், தேங்காய் மஞ்சி மூலம் கயிறு, கால்மிதி, தரைவிரிப்பு உள்ளிட்ட பொருட் கள் தயாரிக்கவும் வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. தென்னை சார்ந்த தொழில்கள் நல்ல ஏற்றுமதி வாய்ப்பை உருவாக்கி தருவதால் அதிகமான விவசாயிகள் தென்னை பயிரிடுவதற்கு மாறி வருகின்றனர்.

295 குவிண்டால் பருத்தி வரத்து

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,02:41 IST

அவிநாசி:அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 295 குவிண்டால் வரத்தாக இருந்தது. கடந்த வாரத்தை விட, அனைத்து ரகங்களின் விலை சற்று குறைந்துள்ளது.அவிநாசி வேளாண்

உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த இந்த வார ஏலத்துக்கு, 800 மூட்டை பருத்தி வரத்தாக இருந்தது. கடந்த வாரத்தை காட்டிலும் 300 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்த நிலையில், அனைத்து ரகமும் குவிண் டாலுக்கு ஆர்.சி.எச்., பென்னி, டி.சி.எச்., ஆகியன ரூ.100 குறைவாக ஏலத்தில் எடுக்கப்பட்டது. இந்த வாரம் எம்.சி.யு., 5 மற்றும் சுரபி ரகம் வரத்தில்லை.

இந்த வார ஏலத்தில் அனைத்து பருத்தி ரகங்களின் விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,500 முதல் ரூ.3,750 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,850 முதல் ரூ.4,050 வரை, டி.சி.எச்., ரூ.3,900 முதல் ரூ.4,200 வரை மற்றும் மட்ட ரகம் ரூ.1,800 முதல் ரூ.2,100 வரை.ஏலம் குறித்து கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறுகையில், ""இந்த வாரம் வரத்து அதிகரித்த நிலையில், சில ரகங்களின் விலையில் சற்று மாற்றம் ஏற்பட்டது. கோபி செட்டிபாளையம், சத்தியமங்கலம், பென்னாகரம், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்து 36 விவசாயிகள், அவிநாசி, அன்னூர், திருப்பூர், கோவையில் இருந்து 10 வியாபாரிகள் ஏலத்தில் பயனடைந்தனர். ரூ.10.70 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது,'' என்றார்.

**வாழை பயிரிடும் விவசாயிகளுக்குதேசிய வேளாண்காப்பீட்டுத் திட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 02,2010,03:54 IST

தூத்துக்குடி: கயத்தார் வட்டாரத்திற்குட்பட்ட கழுகுமலை குறுவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்படி நடப்பு ஆண்டுக்கு வாழைப்பயிருக்கு காப்பீடு செய்ய அறிவிக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் அறிமுக விழா வடக்கு கோனார் கோட்டை கிராமத்தில் நடந்தது. செட்டிக்குறிச்சி பஞ்.,தலைவி மாலையம்மாள் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட தோட்டக்கலைத்துறை இயக்குநர் ஜோசப் கருணாநிதி முன்னிலை வகித்தார். தோட்டக்கலை துணை இயக்குநர் விழாவில் பேசியதாவது;

இத்திட்டத்தின் கீழ் கழுகுமலை குறுவட்டத்தில் பயிரிடப்படும் சுமார் 80 ஹெக்டேர் பரப்பு வாழை பயிரினை விவசாயிகள் காப்பீடு செய்யலாம் எனவும், குத்தகைதாரர்கள் உட்பட அனைத்து விவசாயிகளும் பாங்க் கடன் பெறுவோர், கடன் பெறாதோரும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். சராசரி மகசூலின் 150 சதவீதம் மதிப்புத்தொகை வரை விவசாயிகள் காப்பீடு செய்திடலாம் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். கயத்தார் வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர் நாகராஜன் பேசும்போது; திட்டத்தில் ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு அதிகபட்சம் ஒரு லட்சம் ரூபாய் வரை காப்பீடு செய்யலாம். குறைந்தபட்சம் 10 சென்ட் பரப்புவரை காப்பீடு செய்யலாம்.

காப்பீடு பிரிமீயத்தொகை வாழைப்பயிருக்கு காப்பீடு செய்யும் ரூபாய் ஒரு லட்சத்துக்கு 7.2 சதம், அதாவது ரூ.7 ஆயிரத்து 200 பிரிமியம் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் 50 சதம் மானியம் வழங்கப்பட்டு மீதம் ரூ.3 ஆயிரத்து600 மட்டுமே விவசாயிகள் பிரிமீயமாக பாங்க்கில் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார். திட்டத்தில் சேர பயிர்கடன் பெறாத விவசாயிகள் தங்கள் பாங்க்கில் கண்டிப்பாக சேமிப்பு கணக்கு வைத்திருக்க வேண்டும். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்கம் மற்றும் மங்களாதேவி செய்திருந்தனர்.

தினத் தந்தி

***அளவின் அடிப்படையில் காபி ஏற்றுமதி 50% வளர்ச்சி***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*சர்வதேச அளவில் காபி உற்பத்தியில் இந்தியா 5–வது மிகப்பெரிய நாடாக திகழ்கிறது. 2009–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நடப்பு 2010–ஆம் ஆண்டு ஆகஸ்டு 30–ந் தேதி வரையிலுமான 11 மாத காலத்தில் நாட்டின் காபி ஏற்றுமதி 2,48,305 டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தை விட 50 சதவீதம் அதிகமாகும் என காபி வாரியம் தெரிவித்துள்ளது.*

*சந்தை பங்களிப்பு*

*ரூபாய் மதிப்பு அடிப்படையில் காபி ஏற்றுமதி ரூ.2,541 கோடியாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் ரூ.1,813 கோடியாக இருந்தது. காபி பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரை கணக்கிடப்படுகிறது.*

*சர்வதேச அளவில் காபி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 4.5 சதவீத அளவிற்கு உள்ளது. அதேசமயம் நம்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த காபியில் 70–80 சதவீதம் ஏற்றுமதியாகிறது.*

*ரஷ்யா*

*நம்நாட்டிலிருந்து இத்தாலி, ரஷ்யா மற்றும் ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளே காபியை மிக அதிக அளவில் இறக்குமதி செய்து கொள்கின்றன.*

*அராபிகா காபி உயர்ந்த தரம் கொண்டதாக கருதப்படுகிறது. அதேசமயம் நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் ரோபஸ்டாவின் பங்களிப்பு 70 சதவீத அளவிற்கு உள்ளது. எதிர்வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் மொத்த காபி உற்பத்தி 3,08,000 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தின் உற்பத்தியை விட 6.35 சதவீதம் அதிகமாக இருக்கும்.*

***கழிவுபஞ்சுக்கான ஏற்றுமதி தடையை நீட்டிக்க கோரிக்கை***

கோவை,*செப்.3–*

*கழிவுபஞ்சுக்கான ஏற்றுமதி தடையைநீட்டிக்க கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு ஓப்பன் என்ட் ஸ்பின்னிங் மில்ஸ் அசோசியேசன் அமைப்பு சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–*

பெரும் அவதி

*இந்தியா முழுவதும் 6 லட்சம் ஓ.இ. ரோடார் திறன் கொண்ட 300–க்கும் மேலான ஓ.இ.மில்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் ஸ்பின்னிங் மில்களில் இருந்து வரும் கழிவுப்பஞ்சை மூலப்பொருளாக கொண்டு இயங்கி வருகிறது. கடந்த 6 மாதங்களுக்கு முன் கழிவுப்பஞ்சு இல்லாமல் ஓ.இ. மில்கள் பெரும் அவதிக்கு உள்ளாயின.*

*இதனால் கிலோ ரூ.40 என்று இருந்த கோம்பர் கழிவுப்பஞ்சு திடீர் என்று ரூ.60 என்று ஸ்பின்னிங் மில்கள் விற்பனை செய்தன. பல ஓ.இ. ஸ்பின்னிங் மில்கள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டது. இதைத்தொடர்ந்து மத்திய ஜவுளித்துறை கழிவு பஞ்சு ஏற்றுமதிக்கு தடைவிதித்தது. இதனால் கிலோ ரூ.60–ல் இருந்த கோம்பர் பஞ்சு, மீண்டும் ரூ.40 என்று விற்பனைக்கு வந்தது.*

*ஏற்றுமதி தடையை நீட்டிக்க வேண்டும்*

*ஆனால் கடந்த 10 நாட்களாக கழிவு பஞ்சு ஏற்றுமதி தடையை நீக்கப்போவதாக மத்திய அரசு அறிவித்தது. மீண்டும் ஸ்பின்னிங் மில்கள் கழிவு பஞ்சு கோம்பர்*

விலையை ரூ.40–ல் இருந்து ரூ.55 என விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டன. இதனால் 300–க்கும் மேலான ஓ.இ. மில்கள் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே கழிவு பஞ்சுக்கான ஏற்றுமதி தடையை நீட்டிக்க வேண்டும்.
இவ்வாறு அந்த அறிக்கையில் ஓப்பன் என்ட் ஸ்பின்னிங் மில்ஸ் அசோசியசன் அமைப்பு தெரிவித்துள்ளது.

**முல்லை பெரியாறு பிரச்சினைக்கு சகோதரத்துவ முறையில் தீர்வு காணவேண்டும் கோவையில், கேரள வனத்துறை மந்திரி பினாய் விஸ்வம் பேட்டி**

கோவை,செப்.3–
முல்லை பெரியாறு பிரச்சினைக்கு சகோதரத்துவ முறையில் தீர்வு காண வேண்டும் என்று கேரள மாநில வனத்துறை மந்திரி பினாய் விஸ்வம் கூறினார்.
கலந்துரையாடல் கூட்டம்
கோவை வனக்கல்லூரி வளாகத்தில் உள்ள மத்திய வனப்பயிற்சி கல்லூரியில் பயிற்சி அலுவலர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் வனப்பயிற்சி கல்லூரி முதல்வர் ஜோஸ் மேத்யூ தலைமையில் நடந்தது. கூட்டத்தில் கேரள மாநில வனத்துறை மந்திரி பினாய் விஸ்வம் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–
இயற்கை நமது எதிர்காலம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதை நல்ல முறையில் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு அளிக்க வேண்டும். தேசிய நலன், மக்கள் நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வனங்களை பாதுகாக்க வேண்டும்.
கேரள அரசுக்கு விருது
கேரளாவை பொறுத்தவரை 30 சதவீதம் காடுகள் உள்ளன. மற்ற மாநிலங்களை விட இது அதிகமாகும். கேரளாவில் சர்வதேச அளவில் வனவியல் பயிற்சி கழகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
கேரளாவில் கடந்த 4 ஆண்டுகளில் 1 கோடியே 75 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இதற்காக கேரள அரசுக்கு, மத்திய அரசின் இந்திரா பிரியதர்ஷினி விருட்ச மித்ரா விருது வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.
முல்லை பெரியாறு பிரச்சினை
இதைத்தொடர்ந்து மந்திரி பினாய் விஸ்வம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது

கூறியதாவது:–

முல்லை பெரியாறு அணையை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்ததில் அது பலவீனமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இருமாநில மக்களின் நலன் கருதி அந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசி யம். முல்லைப் பெரியாறு அணையை சுற்றி 5 மாவட்டங்களை சேர்ந்த 5 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர்.

வருகிற காலங்களில் அணையால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என கருதி மாற்று ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த விஷயத்தை நாங்கள் பிரச்சினையாக்க விரும்பவில்லை. தமிழக அரசும், தமிழக மக்களும் எங்கள் நிலையை புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம். தமிழகத்துக்கு நாங்கள் எதிரிகள் அல்ல. சகோதரர்களாக இருக்கிறோம்.

தீர்வு காண வேண்டும்

ஆகவே முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியத்தை தமிழக அரசு புரிந்து கொள்ளும் என்று நம்புகிறோம். இந்த விஷயத்தில் அரசியல் தலைவர்கள் மக்கள் உணர்வுகளை தூண்டக்கூடாது. ஆகவே இந்த பிரச்சினைக்கு சகோதரத்துவ முறையில் தீர்வுகாண வேண்டும்.

சமீப காலமாக கேரள–தமிழ்நாடு எல்லைப் பகுதியில் அடிக்கடி யானைகள் ரெயில் மோதி இறக்கும் சம்பவங்கள் நிகழ்கின்றன. இதை தவிர்க்க ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அறிக்கை அடிப்படையில் இறுதி நடவடிக்கை எடுக்கப்படும். இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு கடிதம் எழுதி உள்ளோம்.


சூரிய மின்வேலி அமைக்க நடவடிக்கை

தற்போது கேரள–தமிழ்நாடு எல்லைப்பகுதியில் செல்லும் தண்டவாளத்தையொட்டி 10 கிலோ மீட்டர் தூரத்துக்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 25 கிலோமீட்டருக்கு மின்வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதன் பின்னர் வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன கருத்தரங்கு ஹாலில் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் மந்திரி பினாய் விஸ்வம் கலந்து கொண்டு விஞ்ஞானிகளுடன் ஆய்வு நடத்தினார். இதற்கு அந்த நிறுவனத்தின் கிருஷ்ணக்குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் வனத்துறை அதிகாரிகள் டி.பி.ரகுநாத், சண்முக சுந்தரம், ரவிச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## *மஞ்சூர் அருகே ஓணிகண்டி மந்து பகுதியில் மேரக்காய் விவசாயம் தீவிரம்*


மஞ்சூர் அருகே ஓணிகண்டிமந்து பகுதியில் பயிரிடப்பட்டமேரக்காய்களை அறுவடை செய்யும் விவசாயிகள்.

*மஞ்சூர், செப்.3–*

*மஞ்சூர் அருகில் உள்ள ஓணிகண்டி மந்து பகுதியில் மேரக்காய் விவசாயத்தில் விவசாயி கள் தீவிரம் காட்டி வருகிறார்கள்.*

*தேயிலை விவசாயம்*

*மஞ்சூர் பகுதிகளில் பெரும் பாலான 80 சதவீத விவசாயி கள் தேயிலை விவசாயம் செய்து வருகிறார்கள். தேயிலை விவசாயத்தை தவிர சுமார் 20 சதவீத விவசாயிகள் மட்டும் காய்கறி விவசாயம் செய்து வருகிறார்கள்.*

*நீலகிரி மாவட்டத்தில் குறிப் பாக குந்தா பகுதிகளில் மழை பொய்த்தாலும், வேறு வழி யின்றி தண்ணீர் உள்ள பகுதியில் மட்டும் காய்கறி விவசாயம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது ஆகும்.*

*தற்போது தேயிலைக்கு நல்ல விலை கிடைக்காததால் ஒரு சில விவசாயிகள், தேயிலை செடிகளை அகற்றி விட்டு, காய்கறி விவசாயத்துக்கு மாறி வருகிறார்கள்.*

*இதே போல் மஞ்சூர் அருகே உள்ள ஓணிகண்டி மந்து பகுதியில் உள்ள விவசாயி ரங்கநாதன் என்பவர் தனது பயன்படாத தேயிலை தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகளை வேருடன் பிடுங்கி எடுத்து, விட்டு காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டுள்ள னர்.*

*மேரக்காய் விவசாயத்துக்கு மாறுகிறார்கள்*

*இவர் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் மேரக்காய் பயிரிட்டு, நல்ல முறையில் பராமரித்து*

*வருகின்றார். இவரை பார்த்து வேறு சிலரும் மேரக்காய் விவசாயத்துக்கு மாறி வருகிறார்கள். அறுவடை செய்யப்படும் மேரக்காய் மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிக்கு எடுத்து சென்று விற்று, வருகிறார்கள்.*

*இது குறித்து விவசாயி ரங்க நாதன் கூறியதாவது:–*

*மஞ்சூர் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக மழை பொய்த்ததன் காரணமாக தேயிலை தோட்டங்கள் பயன் படாமல் கிடக்கிறது. இதனால் பிழைப்பிற்கு வேறு வழியின்றி, மாற்று பயிரான மேரக்காய் பயிரிட்டு வருகிறேன்.*

*வீணாக கிடக்கும் தேயிலை செடிகளை வேறுடன் பிடுங்கி எடுத்து மேரக்காய் பயிரிட்டுள்ளேன்.வன விலங்குகளில் இருந்து மேரக்காய் கொடிகளை காப்பாற்ற சுற்றிலும் வேலி அமைத்து கடும் சிரமத்திற்கு இடையே பயிரிடப்பட்டு உள்ளது.*

*ஆர்வம்*

*தற்போது ஒரு கிலோ மேரக்காய் ரூ.3 முதல் அதிகபட்சம் ரூ.4 வரை கிடைத்ததால் இந்த விலையை வைத்து கூலி மற்றும் பராமரிப்பு செலவிற்கே சரியாகி விடுகிறது. குறைந்த பட்சம் ஒரு கிலோ மேரக் காய்க்கு ரூ.10 வரை விலை கிடைத்தால் மட்டுமே விவசாயிகளுக்கு கட்டுபடி யாகும் நிலை உள்ளது.*

*ஆனால் இந்த பகுதிகளில் மேரக்காய் பயிரிட விவசாயி கள் ஆர்வம் காட்டி வருகிறார் கள். மேரக்காய் விவசாயத்தை ஊக்கப்படுத்த அரசு வங்கி கடன் உதவி செய்தால், விவசாயிகள் நல்ல முறையில் தங்களது வாழ்க்கையை நடத்த முடியும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

தின பூமி

# தொழில்நுட்ப பயிற்சி முகாம்

ஸ்ரீவில்லி,செப்.3

**பயறு வகை பயிர்களில் உயர் விளைச்சலுக்கான தொழில் நுட்ப பயிற்சி முகாம் ஸ்ரீவில்லியில் நடந்தது.**

**பயறு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு ஞிர்வள, நிலவள திட்டத்தின் கீழ் நகரியாறு, உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு பயறு வகை சாகுபடிகள் குறித்த பயிற்சி முகாம் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது.**

இந்த முகாமினை முனைவர் சூரியசந்திரசெல்வன் துவக்கி வைத்து பேசும் போது, உரம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, உயர் விளைச்சல் பெற தேவையானவைகள் குறித்து விளக்கமளித்தார்.

இந்த முகாமில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.